1973 ஆகஸ்ட் 6]

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்படி மாணவர்களைக் குறைத்து ஆசிரியர்களை அதிகப்படுத்த நிறையப் பொருளாதாரம் தேவைப்படுவதால், யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் மூலம் கல்லூரிகளுக்கு உதவிப் பணம் தருவது போல், இதற்கும் மத்திய அரசு உதவிப் பணம் தருவதற்கு முன் வந்திருக்கிறதா ? அப்படியில்லை யென்றால், மாநில அரசு அதை வற்புறுத்திப் பெறுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அகில இந்திய கல்வியமைச்சர்கள் மாநாட்டில், எல்லா மாநிலத்தையும் சார்ந்த கல்வியமைச்சர்களும் அதைத்தான் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள், கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும், அதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாத காரணம் நிதிப் பற்றாக்குறைதான். ஆகவே, நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு மத்திய அரசு ஒரு திட்டம் தீட்டி, மாநில அரசுகளுக்கு உதவ வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அதைப் பரிசீலித்து அனுமதியளிக்குமேயானால், அது பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

Population education in schools.

29 *Q.*—Thiru A. Parandhaman : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to introduce "Population Education" in the syllabus for Elementary School children ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாதது என்பதை விளக்கும் பாடங்கள் தொடக்கப் பள்ளிகளுக்கான புதிய பாடத் திட்டத்தில் தக்க வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

[1973 ஆகஸ்ட் 6

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பள்ளிகளிலே 'ஸெக்ஸ் எடுகேஷன்' கேரளத்தில் சில பள்ளிகளில் புகுத்தியிருக்கிறார்கள். பொதுவாக, ஸெக்ஸ் எடுகேஷன் தேவை என்ற கருத்து மேல் நாடுகளில் இப்போது பரவி வருகிறது. அந்த மாதிரி 'ஸெக்ஸ் எடுகேஷன்' இங்கேயுள்ள பள்ளிகளில் புகுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி பல்வேறு கருத்துக்கள் கல்வி வல்லுநர்களிடையே நிலவி வருகிறது. கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, மக்கள் பெருக்கத்தைப் பற்றி. மாணவர் பருவ காலத்தில் (பாபுலேஷன் அவேர்னஸ்) மக்கள் தொகை பெருக்கத்தால் பொருளாதாரம் எந்த அளவுக்குக் குறையும் என்பதை அறிவுறுத்தும் பொருட்டு இப்போது பாடத் திட்டத்தில் அது புகுத்தப்பட்டு இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் என்பது வேறு. மக்கள் தொகை பெருக்கம் என்பது வேறு. குடும்ப நலத் திட்டத்தை வற்புறுத்துவது என்றால் அதற்கு வயது முதிர்ச்சி தேவைப்படுகிறது. நாம் இப்போது பள்ளி அளவில், மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகளைக் குறித்துத்தான் பாடம் புகுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல், (ஸெக்ஸ் எடுகேஷன் பால் பற்றிய கல்வி அளிக்க வேண்டுமென்ற உணர்வு அந்தக் கருத்து இப்போது மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையில் ஆராயப்பட்டு வருகிறது. மேலை நாடுகளில் அது பற்றிய கல்வி இருந்தால் தான், எதிர்காலத்து மாணவர்கள் அதன் தன்மைகளைத் தெரிந்து கொண்டு, அதனால் ஏற்படும் தீங்குகளைக் களைந்து நல்ல முறையில், நாகரீகமான வகையில் வாழலாம் என்று வைத்து இருக்கிறார்கள். அப்படி அந்தக் கல்வி வைக்கப் பட்டாலும், அது கல்லூரி மட்டத்தில் தான் வைக்கலாம் என்ற கருத்தும் கூறப்பட்டு வருகிறது. கேரளத்தில் புகுத்தப்பட்டு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய அனுபவத்தை வைத்துக் கொண்டு—ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு —அது எப்படி ஓரளவிற்கு நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை ஆராய்ந்து, நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டால் நாமும் வைக்கலாம்.

1973 ஆகஸ்ட் 6]

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, பள்ளிகளிலே, கல்லூரிகளிலே மாணவர்கள், மாணவியர்கள் மத்தியில் அதிகமாக நல்லதொரு தொடர்புகள் இப்போது கிடையாது, பெண்களைப் பார்த்தால் கண்ணடிப்பதும், கலாட்டா செய்வதுமாக இருக்கிறார்கள். நெருங்கிய தொடர்பு கிடையாது. ஆகவே, ஆரம்பப் பள்ளிகளிலிருந்தே மாணவர்களையும், மாணவியர்களையும் ஒன்றாகப் படிக்கவைக்க வழி செய்து விட்டால், ஸெக்ஸ் எடுகேஷன் சொல்லிக் கொடுத்து விட்டால், சரி இவ்வளவு தானா என்று நினைத்துக் கொண்டு, பேசாமல் விட்டு விடுவார்கள். அரசு அதற்கு வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போதே துவக்கப்பள்ளி, உயர் துவக்கப்பள்ளி ஆகிய இடங்களில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள். கல்லூரி மட்டத்தில் புகுமுக வகுப்பில் மட்டும் பெண்கள் சேர்ந்து படிக்கும் நிலை சென்னைப் பல்கலைக் கழகப் பகுதிகளில் இல்லை. மதுரைப் பல்கலைக் கழகப் பகுதிகளில் புகுமுக வகுப்பில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளலாம்—சில பல வசதிகளைச் செய்து கொடுத்தால்—என்று இருக்கிறது. நான் முதலிலே கூறியது மாதிரி, பக்கத்தில் கேரளத்தில் வைத்திருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, அது எந்த அளவுக்கு அங்கே வெற்றி பெற்று இருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிந்த பின், நாமும் அதைப் புகுத்துவது பற்றி ஆலோசிக்கலாம்.

மாதிரிப் பள்ளிகள்.

***30 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின், மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளி ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ், வரும் நிதி ஆண்டில் எத்தனை பள்ளிகள் துவங்கப்பட இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இத் திட்டம் மைய அரசினரால் இன்னும் ஏற்கப்படவில்லை.